1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தண்ணீர் வசதி அதிகமாக இல்லாத காரணத்தால் அங்கே வந்து தங்கி வசதி பெறுகிறவர்கள் தங்க மறுக்கிறார்கள். ஐந்து பேர் இருக்கிறார்கள். எனவே தான், அதை வேறு இடத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

காரையூர் மீனவர்களுக்கு வீட்டு மனைகள்

* 765 வினா.—**திரு. க. சுப்பு:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் காரையூரில் வசிக்கும் மீனவர்கள் வீட்டு மனைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள், அளவிடப்பட்டு, அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா?

(இ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மீனவர்களின் வீட்டுமனைக்கென்று ஒதுக்கப்பட்ட 1,26 ஏக்கர் பரப்புள்ள நிலம் வருவாய்த்துறையால் இன்னும் உட்கோட்டம் செய்யப்படாமலும், எல்லை வகுக்கப்படாமலும் உள்ளது. இது குறித்து ராமநாதபுரம் மாவட்டம் ஆட்சித் தலைவரிடமிருந்து கேட்கப்பட்டுள்ள அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, ராமேஸ்வரம், தனுஷ்கோடி என்ற இடத்தில் பாதி கட்டிடங்கள் இடிந்தும், பாதி கட்டிடங்கள் நல்லவையாகவும் இருக்கின்றன. அது மத்திய அரசுக்குச் சொந்தமா, மாநில அரசுக்குச் சொந்தமா என்று எனக்குத் தெரியவில்லை. மாநில அரசுக்குச் சொந்தமாக இருந்தால், அதிலே மீனவர்கள் குடியிருப்புக்கு நல்ல வசதி இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசு முற்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இது காரையூர் கிராமத்தில் அவர்களுக்கு என்று இடம் எடுத்தாகிவிட்டது. வருவாய்த் துறை கோடிட்டு பகிர்ந்து அந்த நிலத்தைக் கொடுக்கவில்லை. அதனால் தான் இப்போது நிலுவையில் இருக்கிறது.

Coffee Plantations

* 766. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether the Government have proposed to raise any coffee plantations in this State; and

(*b*) if so the details thereof?